**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2020**

**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பிற்கால அறநூல்கள் தோன்றிய காலத்தைக் குறிப்பிடுக.
2. ஏலாதி நூலின் ஆசிரியர் யார்?
3. சிறந்த பத்து அதிகாரத்தின் பெயர்க் காரணத்தைக் குறிப்பிடுக.
4. நீதிநூல், பெண்மதிமாலை ஆகியவற்றை இயற்றியவர் யார்?
5. எந்தச் செல்வத்தால் பயன் இல்லை?
6. சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை 96 என்று கூறும் இரு பாட்டியல் நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
7. கொடுங்கோன்மை பற்றிச் சதகம் குறிப்பிடுவதை விளக்குக.
8. கருணாகரன் எந்த மன்னனின் படைத்தலைவன் ஆவான்?
9. மடல் இலக்கியத்தின் பெயர் காரணத்தை விளக்குக.
10. தூது இலக்கியம் எவ்வகை இலக்கிய வகையைச் சார்ந்தது?
11. நல்வழி – பெயர்க்காரணம் தருக.
12. வன்சொல்லால் வெல்ல முடியாததை எச்சொல்லால் வெல்ல முடியும்?

13. யானை போன்றவரின் நட்பை நீக்க வேண்டும். ஏன்?

14. இருசுடர் என்று எவற்றை குறிப்பிடுகிறது நான்மணிகடிகை?

15. நத்திக் கலம்பகத்தில் புயம் என்ற உறுப்பு எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. உயர்ந்த பண்புகள், தீய பண்புகள் – இவற்றைப் பட்டியல் இடுக.
2. மனித வாழ்க்கைக்கு அடிப்படையானவர் என்று உலகநீதி யாரைக் குறிப்பிடுகிறது?
3. மறவர்கள் காளிக்குத் தங்களைப் பலியிட்டுக் கொள்ளும் நிகழ்ச்சியை விவரிக்க.
4. அபிராமியின் கடைக்கண்கள் தரும் பயன்களைத் தருக?
5. சதக இலக்கியங்களின் நோக்கங்களில் இரண்டினைக் விளக்குக.
6. இன்னா நாற்பது காட்டும் ஈகையும் இரத்தலும் குறித்து விளக்குக.
7. கல்வி செருக்கு குறித்து நன்னெறி கூறும் கருத்துகளை விவரி?
8. திருக்கோவையார் குறித்து சிறு குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) நந்திக் கலம்பகம், அதன் வரலாறு குறித்து ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பள்ளு இலக்கிய வரலாறு குறித்து ஒரு கட்டுரை வரைக.

2. (அ) ஆத்திசூடி, கொன்றை வேந்தன் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) நாலடியார் மூலம் நீவீர் அறியும் அற கருத்துக்களை விவரி.

3. (அ) குறவஞ்சி இலக்கியம் தோற்றம் அமைப்பு குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பழமொழி நானூறில் இடம் பெற்றுள்ள பழமொழிகள் குறித்து கட்டுரை வரைக.

***